RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22498

# திருக்குற்றாலக் குறவஞ்சியில் இயற்கை வருணனை

தே.வி சுஜா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627012), தொலையாவட்டம் - 629151, தமிழ்நாடு, இந்தியா

# Thirukutrala kuravanchiyil Iyarkai Varunanai

**D.V. Suja** [a, *]

[a] Department of Tamil, Annai Velankanni College, (Manonmaniam Sundaranar University, Tirunelveli - 627012), Tholayavattam - 629151, Tamilnadu, India

* Corresponding Author:
sujadvavc@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Kattiyangaran tells the villagers about the uprising of Thirukkuttala Nathar. Kuttala Nathar is walking on the street, chanting the sacred verses. Knowing this, women of the age group come to see Thirukkuttala Nathar. Vasantha Valli, who is good at playing ball, also falls in love with Thirukkuttala Nathar. In this situation, she sees a Kurathi fortune teller. She calls her and asks her to guess. Kurathi tells her everything about her country, mountains and cities. Then, looking at Vasantha Valli's hand, she tells her that she is in love with Thirukkuttala Nathar and about the fame of Thirukkuttala Nathar. She also says that Vasantha Valli's wish will come true and accepts the prize. In this situation, Kuravan, who has been searching for Thirukkuttala Nathar, is shocked to see her. She tells him about the events that have happened and the two of them enjoy singing Thirukkuttala Nathar.

**Keywords:** Thirukkuttala Nathar, Thirukutrala kuravanji, Vasantha Valli, Kurathi

## முன்னுரை

தமிழ் மொழியில் அமைந்த சிற்றிலக்கிய வகைகளுள் திருக்குற்றாலக் குறவஞ்சி சிறப்புமிக்க நூலக அமைந்துள்ளது. இந்நூல் குறவர் இன மக்களின் வாழ்வியலை பேசுவதோடு, மட்டுமல்லாமல் குறிஞ்சி நிலவருணணை, மக்கள் வாழ்வியல், காதல், குறவன், குறத்தியின் பாசப்பிணைப்பு, இயற்கை வருணணை என சுவை மிக்க இலக்கிய நயத்தோடு அமைந்துள்ளது. மேலும் இக்கட்டுரை குற்றால நாட்டின் இயற்கை வருணனையை படம் பிடித்து காட்டுவதாய் அமைந்துள்ளது.

## நூலின் சிறப்புகள்

குறவஞ்சி புகழ்பெற்ற இலக்கியமாக திகழ்வதோடு மட்டுமல்லாமல் இன்றளவும் மேடைகளில் நாட்டிய நாடகமாக நடிக்கப்பட்டு வருகின்றது. திரிகூடராசப்பக் கவிராயர் பல நூல்கள் இயற்றியிருந்தாலும் குறவஞ்சி நூல் மிகவும் சிறப்பு மிக்கதாக கருதப்படுகிறது. குற்றால குறவஞ்சியானது இறைவன் மீது பாடப்பெற்றதால் திருக்குற்றாலக்குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது. இந்நூல் ஓசை நயமும், கற்பனை நயமும், இலக்கிய சுவையும் உடையதாக விளங்குகின்றது. மேலும் இந்நூலின் தொடக்கத்தில் விநாயகர். முருகன், திரிகூடநாதர், சுந்தரர்,

அகத்தியர், மாணிக்கவாசகர், கலைமகள் ஆகியோரை வணங்கி நூலை தொடங்குவது மேலும் சிறப்பாக அமைந்துள்ளது.

## மலைவளம்

குற்றால நகரின் தெருவில் வரும் குறத்தி குற்றால நாதரின் பெருமைகளை பாடிக் கொண்டு வருகிறாள். அவளை வசந்தவல்லி அழைத்து குறத்தியின் சொந்த மலையைக் குறித்து பாடுமாறு கேட்கிறாள். குறத்தி குற்றால மலையின் சிறப்புகளை எடுத்தியம்புகிறாள்.

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்

மந்திசிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்

கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்

கமனசித்தர் வந்தவந்து காயசித்தி விளைப்பார்

தேனருவின் திரை எழும்பி வானின்வழி ஒழுகும்

செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுக்கும்

கூனலிளம் பிறைமுடிந்த வேணியலங்காரர்

குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே" (திரு.குற - ப.எ.89-90)

ஆண் குரங்குகள் பலவகையான பழங்களையும் பறித்துக் கொண்டு வந்து கொடுத்துத் மந்திகளோடு கொஞ்சிக் கொண்டிருக்கும். அப்போது அம்மந்திகள் கீழே சிந்துகின்ற கனிகளுக்காக எதிர்பார்த்து தேவர்களும் கெஞ்சிக் கொண்டிருப்பார்கள். கானவராகிய வேடுவர்கள் தம் கண்களால் உற்று நோக்கி அந்த வானவர்களை கீழே வருமாறு அழைத்துக் கொண்டிருப்பார்கள். வானிலே இயங்கும் சித்தர்கள் பலரும் அடிக்கடி வந்துவந்து காயசித்தி மூலிகைகளை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். தேனருவியானது அலைகள் மேலே எழும்பிச் சென்று வானின் வழியாக ஒழுகிக் கொண்டிருக்க அதனால் செங்கதிரோன் தேர்க்குதிரைகளின் கால்களும் தேர்ச்சக்கரங்களும் வழுக்கிவிழவும் நேரும் அத்தகைய வளமுடைய திரிகூட மலைதான் எங்களுடைய மலையாகும் என மலையின் வளத்தை குறத்தி வசந்தவல்லியிடம் கூறினாள்.

## நீர் வளம்

நீர் இல்லாமல் எத்தகையோருக்கும் உலக வாழ்க்கை அமையாது. நீர் வாழ்வின் ஆதாரம் என்பதை திருவள்ளுவர் தன் குறளில்

"நீர் இன்று அமையாது உலகெனின் யார் யார்க்கும்

வான் இன்று அமையாது ஒழுக்கு" (குறள் - ப.எ. 11)

இதனை குற்றால குறவஞ்சியில் குறத்தி வசந்தவல்லியிடம் தன் நாட்டு நீர் வளத்தை குறித்து எடுத்தியம்புகிறாள்.

"முழங்குதிரைப் புனலருவி கழங்கென முத் தாடும்

முற்றம் எங்கும் பரந்து பெண்கள்

சிற்றிலைக் கொண்டோடும்" (திரு.குற.ப.எ. 90)

முழக்கமிடும் அலைகளையுடைய நீர்வீழ்ச்சியானது தானம் கழங்காடுவது போல முத்துகளைச் சொரிந்து கொண்டிருக்கும் கானவர் மனைகளின் முற்றங்களிலெல்லாம் பரவிப் பெண்களின் சிற்றில்களையும் அவ்வருவி நீரானது கொண்டு ஓடிக்கொண்டும் இருக்கும் என நீர் வளம் குறித்த சிறப்பை பாடலாக எடுத்தியம்புகின்றாள்.

## நாட்டு வளம்

குறத்தி தன்னுடைய நாட்டின் வளங்களை ஒவ்வொன்றாக கூற நாட்டு வளம் பற்றியும் கூறலானாள்.

"மாதம் மூன்றும் மழையுள்ள நாடு

வருடம் மூன்று விளைவுள்ள நாடு

வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு

விசேஷம் மூன்றும் குலாவுள்ள நாடு

போதம் மூன்றும் நலம் செய்யும் நாடு

புவனம் மூன்றும் வலஞ்செய்யும் நாடு

நாதம் மூன்றுரு வானக்குற் றால

நாதர் ஆரிய நாடெங்கள் நாடே" (திரு.குற.ப.எ. 98)

மாதந் தவறாமல் மூன்று மழை பொழிக்கின்ற நாடு; வருடம் மூன்று போகங்கள் வீதம் விளைகின்ற நாடு; வேதங்களே வேர், மரம், பயன் என மூன்றாகவும் அமைந்த குறும் பலா மரத்தினை உடைய நாடு; நித்தியம், நைமித்திகம்; காமியம் ஆகிய மூவகைச் சிறப்புகளும் தவறாமல் நிகழ்கின்ற நாடு; பிறப்பு; வாழ்வு, இறப்பு என்னும் மூன்று நிலைகளிலும் நன்மை விளைவிக்கும் சிவ நாடு; மூன்று புவனங்களாகிய மேல், நடு, கீழ் ஆகியவற்றில் உள்ளரானை வரும் வலஞ்செய்து போற்றும் நாடு; நாத தத்துவத்தின் மெய்ப்பொருளாக அரி, அயன், அரன் என மூன்றுருவக விளங்கும் குற்றாலநாதரின் ஆரிய நாடே எங்கள் நாடாகும்.

இப்பாடலானது ஓசை நயமிக்க பாடலாய் அமைந்துள்ளது. தன் நாட்டின் வளத்தை கூறும் பொழுது மழை, வேதம், இறப்பு என பல செய்திகளை எடுத்தியம்பும் வண்ணம் இலக்கிய சுவை உடையதாய் காணப்படுகிறது.

## நகர் வளம்

குறத்தி வசந்தவல்லியிடம் தன் நாட்டின் நகர் வளம் குறித்து கூறலானாள்.

குற்றால நாதர் நடனம் ஆடும் மன்றமாகிய சித்திர சபையில் தேவ முரசானது எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கும். நான்கு யுகங்களும் இவ்விடத்தில் இருப்பவர்களுக்கு நான்கு கிழமைகளை போல் இருக்கும். மதயானையானது நாள் தவறாமல் பூசை செய்து பேறுபெற்ற இடமும் இதுவாகும். வெற்றி சிறப்புடைய தேவர்கள் உருமாறி குன்றுகளாகவும், மிருகங்களாகவும் வந்து தவஞ் செய்யக் கூடிய இடம் இதுவே ஆகும்.

"மன்றுதனில் தெய்வ முரசென்றுமேல் முழங்கும்

வளமை பெருஞ் சதுரயுகம் கிழமைபோல் வழங்கும்

நின்றுமத கரிபூசை அன்று செய்த தலமே

நிந்தனை செய் புட்பகந்தன் வந்தனை செய்தலமே

பன்றியொடு வேடன் வலஞ் சென்றதிந்தத் தலமே

பற்றாகப் பரமர் உறை குற்றாலத் தலமே

வெற்றி பெருந் தேவர்களும் குன்றமாய் மரமாய்

மிருகமதாயத் தவச்சிருக்கும் பெரியத்தலம் அம்மே" (திரு.குற.ப.எ.103-104)

என்னும் பாடல் வழியாய் தன் நகர் வள சிறப்பினையும், பெருமைகளையும் எடுத்துரைத்தாள். மேலும் குற்றால நாதர் வீற்றிருக்கும் மலைவளம் பற்றியும், நாட்டு வளம் பற்றியும் வசந்தவல்லியிடம் கூறி வசந்த வல்லியின் கைகளை பிடித்து குறத்தி குறி கூறலானாள்.

## முடிவுரை

குறவஞ்சி இலக்கியம் மலைவளம், நாட்டுவளம், நகர்வளம் என பல்வேறு செய்திகளை கூறுவதோடு குறவர் இன மக்களின் வாழ்வியலையும் எடுத்தியம்புவதாய் அமைந்துள்ளது. மேலும் குற்றால நாதர் மீது வசந்தவல்லி கொண்ட காதல், குறத்தி, குறி சொல்லுதல், இலக்கிய நயம், மற்றும் கற்பனைத்திறன், ஓசை நயம் கொண்டதாய் குறவஞ்சி அமைந்துள்ளது.

## References

Murugan (2022), Thirukural Thiravukol, New Century Book House (P) Ltd, Chennai- 600 050

Puliyurkesikan (1960) Bari Station, 184,Brodway, Pavai Printers (P) Ltd,Chennai -600 013

Puliyurkesikan (2017) 23 B/ 2739 Doppul Pillayar Temple Street, South lanka Pavai printer (p) Ltd, Thanjavur-613 001

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License